**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 325/2024**
**வழக்கு சாட்சி PW–11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr. பழனிக்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மாடசாமி | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | திருநெல்வேலி | வயது | : | 43 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 04.06.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காணொளி மூலம் ஆஜரானார்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் எலும்பு மூட்டு பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20.11.2019 அன்று நான் பணியில் இருக்கும் போது, ரேவதி என்ற 40 வயதுடைய பெண் நபரை அவசர சிகிச்சைப்பிரிவில் அழைத்து வரப்பட்டார். அவருக்கு டாக்டர்.இன்பேன்ட் புஷ்பவெனிஷா என்பவர் எக்ஸ்–ரே அறிக்கை வழங்கியுள்ளார். எக்ஸ்–ரே அறிக்கையின் படி அவருக்கு கீழ்க்கண்ட எலும்பு முறிவுகள் இருந்துள்ளது.

(1). வலது கை 3, 4, 5 விரல்களில் மெட்டா கார்பல் எலும்பு முறிவு இருந்துள்ளது.

(2). அதே கையில் 3 வது விரலில் ப்ராக்ஸிமல் பேலிங்ஸ் எலும்பு முறிவு இருந்துள்ளது.

(3). இடது முழங்கையில் எலும்பு முறிவு இருந்துள்ளது.

(4). வலது முட்டில் எலும்பு முறிவு இருந்துள்ளது.

காயம்பட்ட நபருக்கு எக்ஸ்–ரே அறிக்கைப்படி அவருடைய வலது இடுப்புப்பகுதியில் சிறிய எலும்பு முறிவு இருந்தது. ஆனால், நான் சிகிச்சை வழங்கிய போது அந்த எலும்பு முறிவானது மிக மிக சிறியதாக இருந்ததினால், அது தானாகவே சரியாகிவிடும் என்பதினால் அதற்காக தனியாக சிகிச்சை அளிக்கவில்லை. இதர எலும்பு முறிவுகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு, சிகிச்சை வழங்கி 02.12.2019 அன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை விபரச்சான்று அ.சா.ஆ.10 ஆகும். நுண்கதிர் படங்கள் மற்றும் அறிக்கை சிகிச்சை கோப்பில் உள்ளது.

(சாட்சி திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து சிகிச்சை குறிப்புகளை பார்த்து சாட்சியம் அளித்தார். அந்த சிகிச்சை குறிப்புகளில் இருந்த நுண்கதிர் படம் மற்றும் அறிக்கை ஸ்கேன் செய்து இந்நீதிமன்ற இ–மெயிலில் அனுப்புவதற்கு சொல்லப்பட்டது. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் மேற்குறிப்பிட்ட ஆவணங்களின் நகலை சாட்சி சான்றாவணமாக குறயீடு செய்ய வேண்டுகோள் விடுத்தார். எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அதற்கு ஆட்சேபனை தெரிவித்தார். மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் வழக்கை தீர்மானிப்பதற்கு அவசியம் என்பதினால் சாட்சி சான்றாவணமாக ஆக குறியீடு செய்ய அனுமதிக்கப்பட்டது).

நுண்கதிர் மற்றும் அறிக்கை – சா.சா.ஆ.1 ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகியும், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

சாட்சி திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Sivamurugan, Junior Assistant திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் எதிரி முன்னிலையில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.16 11:04:10 +0530